# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,931/5—1970 නොවැම්බර් 8 වැනි ඉරිදා — 1970.11.8

14,931/5 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 8 ந் திகதி ஞயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

**2, 5, 6, 9 ஆகிய பிரிவுகளின் கீழான கட்டளை**

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2, 5, 6, 9 ஆகிய பிரிவுகளினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

ෆී. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஞூ நவம்பர் மீ 8 ந் உ.

*கட்டளை*

அளவ்வைப் பட்டின சபை அமைப்பு சம்பந்தமாக 1970, யூலை 2 இன் 14,912/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அதனோடுள்ள முதலாம் அட்டவணையில், பட்டினத்தின் வட எல்லையினது விவரணத்துக்குப் பதிலாக இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரணத்தை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அதனோடுள்ள இரண்டாம் அட்டவணையில் 2 ம் வட்டாரத்தினது வட எல்லையின் விவரணத்திலுள்ள " 2/3 " என்னும் இலக்கத்துக்குப் பதிலாக " 1/3 " என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்.

**அட்டவணை**

வடக்கு : அளவ்வை—கிரியுல்லை வீதியிலுள்ள 8/5 ம் இலக்க மதகின் மத்தியிலிருந்து நேர் வடக்காக 200 யார் தூரத்திலுள்ள ஓர் இடத்திலிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்தியகோட்டுக்குச் சமாந்தரமாகவும் அதிலிருந்து 200 யார் தூரத்திலும் அளவ்வை—தம்பலெஸ்ஸ வீதியின் மத்திய கோட்டிலிருந்து மேற்கே 200 யார் தூரத்திலுள்ள ஓரிடத்தைச் சந்திக்கும் வரைக்கும் அங்கிருந்து வடக்கு நோக்கி அளவ்வை—தம்பலெஸ்ஸ வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் அதிலிருந்து 200 யார் தூரத்திலுள்ள ஒரு கோட்டின் ஓரமாக அளவ்வைக்கும் ஹப்புகஹகெதற (எவ். வீ. பி 462) வுக்கும் இடையிலுள்ள பொதுக் கிராம எல்லையைச் சந்திக்கும்வரைக்கும் ; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லபட்ட கிராம எல்லையோரமாக அளவ்வை—தம்பலெஸ்ஸ வீதியை அவ்வீதியிலுள்ள 2/2 ஆம் இலக்க மதகின் மத்தியடியில் கடந்து அளவ்வை—தம்பலெஸ்ஸ வீதியிலுள்ள சொல்லப்பட்ட 2/2 ஆம் இலக்க மதகின் மத்திக்கும் கிழக்கே 200 யார் தூரத்திலுள்ள ஓர் இடம் வரைக்கும் ; அங்கிருந்து தெற்கு நோக்கி அளவ்வை—தம்பலெஸ்ஸ வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் அதிலிருந்து 200 யார் தூரத்திலுமுள்ள ஒரு கோட்டின் ஓரமாக அளவ்வை—கிரியுல்லை வீதியின் மத்திய கோட்டிலிருந்து வடகிழக்கே 200 யார் தூரத்திலுள்ள ஓரிடம் வரைக்கும் ; அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி அளவ்வை—கிரியுல்லை வீதியின் மத்தியகோட்டுக்குச் சமாந்தரமாகவும் அதிலிருந்து 200 யார் தூரத்திலுமுள்ள ஒரு கோட்டின் ஓரமாக கொழும்பு—கண்டி பிரதான புகையிரதப் பாதையின் மத்தியகோட்டிலிருந்து வடமேற்கு நோக்கி 200 யார் தூரத்திலுள்ள ஓர் இடம் வரைக்கும் ; அங்கிருந்து வடகிழக்கு நோக்கி சொல்லப்பட்ட புகையிரதப் பாதையின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் அதிலிருந்து 200 யார் தூரத்திலுமுள்ள ஒரு கோட்டின் ஓரமாக அளவ்வைக்கும் கொஹொலனே (எவ். வீ. பி. 431) க்கு மிடையிலுள்ள பொதுக் கிராம எல்லையைச் சந்திக்கும் வரைக்கும் ; அங்கிருந்து தென் கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட கிராம எல்லையோரமாக கொழும்பு—கண்டி பிரதான புகையிரதப் பாதையின் மத்தியகோட்டினைச் சந்திக்கும் வரைக்கும் ; அங்கிருந்து வடகிழக்கு நோக்கி கொழும்பு—கண்டி பிரதான புகையிரதப்பாதையின் மத்தியகோட்டின் ஓரமாக கொழும்பு—குருநாகல் வீதியிலுள்ள 44/5 ம் இலக்க மதகின் மத்தியிலிருந்து நேர் வடக்கிலுள்ள ஓர் இடம்வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினுல்.

11-483/1

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1967 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறுன (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 11 ம் பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

ஐ. ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 8 ந் உ.

### கட்டளை

புத்தளம் மாவட்டத்திலுள்ள யட்டகலம்பற்றுக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் இப்பொழுது பதவிவகிக்கும் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடையும் திகதியாக 1970 திசெம்பர் 31 ந் திகதிக்குப் பதிலாக 1971 யூன் 30 ந் திகதி இத்தால் நியமிக்கப்பட்டுள்ளது.

11–483/2

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவினுலும் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சிச் சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 84 ஆம் பிரிவினுலும் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள் நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

ஜே. ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நொவம்பர் மீ 8 ந் உ.

### கட்டளை

1970 எப்பிறல் 10 ந் திகதிய 14,901 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினுல் கடைசியாகத் திருத்தப்பட்டவாறுன 1967 செத்தெம்பர் 22 ந் திகதிய 14,767 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட சிலாபம் மாவட்டத்திலுள்ள யட்டகலன்பற்றுக் கிராமப் பிரதேசத்தை மூன்று புதிய கிராமப் பிரதேசங்களாகப் பிரிக்கும் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை அதன் கண்ணுள்ள 2 (ஆ) ஆகிய பந்தியில் "1971 ஆம் ஆண்டு சனவரி மாதத்து முதலாவது தினம்" என்னும் வாக்கியத்துக்குப் பதிலாக "1971 ஆம் ஆண்டு யூலை மாதத்து முதலாவது தினம்" என்னும் வாக்கியத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

11–483/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.